# ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா
# திருநாள் பாட்டு

எத்திசையும் புகழ் ஓங்கி வளர்ந்திட வந்து பிறந்திடு நாள்
ஏரணி கீர்த்தி எம்பெருமானார் தம் தரிசனம் ஏய்ந்திடு நாள்
பக்தி விரக்திகள் பாங்கினில் ஓங்கிடப் பாரினை உய்த்திடு நாள்
பாவனம் ஆகிய பரமபதம் தனில் வாசல் திறந்திடு நாள்
முத்தி தரும் நகர் ஏழினில் சீரிய கச்சி விளங்கிடு நாள்
முன்னவர் அருளிய மொழிகள் விளங்கிட வீறு பெறுத்திடு நாள்
ஒத்த முடும்பைக் குலத்தில் ஓர் சீரிய வாதி பயங்கரனார்
உலகில் உதித்திடு நாள் திருவாடியில் புஷ்யம் எனும் நாளே

---